# இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 02.05.2018

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 20°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மண்டலப் பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 38°செ முதல் 39°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 முதல் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ முதல் 14 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையினை வேர்பகுதிகளில் தேக்கும் வகையில் தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுக்கவும்.
- ✓ இலேசான மழையை எதிர்பார்க்கப்படுவதால் மண்ணிண் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும் குறிப்பாக தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும்.
- ✓ கம்பு பயிரை இறவை பயிராக பயிர் செய்ய இது உகந்த பருவம். மழையினால் கிடைக்கப்பெற்ற ஈரம் குறைவாக இருப்பின் விதைத்தவுடன் நீர்பாசனம் செய்யவும்.
- ✓ மஞ்சள் நடுவதற்கு வயல் தயார் செய்ய இதுவே உகந்த காலமாகும். எனவே விவசாயிகள் வயலை உழவு செய்து பண்படுத்தி வைக்கவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன்காணப்படும். பகல் நேர வெப்பநிலையானது 36°செ முதல் 40°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°செமுதல் 29°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 8 முதல் 16 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ இறவை உளுந்து பயிருக்கு விதைத்த மூன்றாம் நாள் பெண்டிமெத்தலின் களைக்கொல்லியை ஏக்கருக்கு 1.3 லிட்டர் என்ற அளவில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும்.
- ✓ நெல் தரிசுப் பருத்திக்கு 45-ம் நாள் ஒரு களை எடுத்துவிட்டு 3 நாட்கள் கழித்து உரமிட்டு மண் அணைத்து நீர் பாய்ச்சவும்.
- ✓ நெல் தரிசு பருத்தியில் ஏக்கருக்கு 2.5 கிலோ காட்டன் பிளஸ் என்ற பயிர் ஊக்கியை (2.5 கிலோ காட்டன் பிளஸ் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து) பூக்கும் மற்றும் காய் பிடிக்கும் தருணத்தில் தெளிக்கவும்.
- ✓ அதிக வெப்பம் உள்ள இடங்களில் கால்நடைகளுக்குகான கொட்டகை கூரையின் உயரம் 3.0 முதல் 5.0 மீ வரை இருக்க வேண்டும்.
- ✓ நெல் தரிசு உளுந்து பயிரானது தற்போது முதிர்ச்சி நிலையில் உள்ளதால் முதிர்ந்த காய்களை பறித்து உலர்த்த வேண்டும் அல்லது செடியினை வேரோடு பிடுங்கி குவித்து வைத்து உலர்த்தவும்.

- ✓ உளுந்து விதைகளை சுமார் 9 – 10 சதம் ஈரப்பதத்திற்கு வரும் வரை காயவைக்கவும். சேமிப்பின்போது வண்டுகள் தாக்காமலிருக்க 100 கிலோ விதையுடன் ஒரு லிட்டர் வேப்ப எண்ணெய் அல்லது ஒரு கிலோ ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணுடன் கலந்து சேமிக்கலாம்.
- ✓ கோடை சித்திரை பட்டத்தில் இறவை உளுந்து விதைப்பு செய்யவும். இப்பருவத்தில் விதைப்பு செய்ய ஆடுதுறை 5 மற்றும் வம்பன் 6 ஆகியவை ஏற்ற இரகங்கள்.
- ✓ பண்ணையின் சாணக்கழிவுகளை உடனுக்குடன் அப்புறப்படுத்துவதால் ஈ மற்றும் கொசுக்கள் முட்டையிடுவதை தவிர்க்கலாம்.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 34°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 40 முதல் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 8 முதல் 25 கி.மீவேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ பயிர் கழிவுகளை பயிர்களுக்கு இடையில் பரப்பி மண்ணின் ஈரப்பதத்தை தக்கவைத்து கொள்ளவும்.
- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக வெப்பநிலையின் தாக்கத்தை குறைக்க கால்நடைகளுக்கு குளிர்ந்த நீர் மற்றும் பசுந்தீவனங்களை போதிய அளவு அளிக்கவும். கொட்டகையை சுற்றிலும் கோணிப்பைகளை கட்டி நீரை தெளித்து அதிக வெப்பநிலையின் தாக்கத்தை மட்டுப்படுத்தவும்.
- ✓ கோடை மாதங்களில் எதிர்பாராத மழைப்பொழிவு மூலம் மண்ணின் ஊடுருவல் மேம்படுத்தவும் களை வளர்ச்சியை கட்டுப்படுத்தவும் கோடை உழவு முறை செயல்படுத்தவும்.
- ✓ கோடை மாதங்களில் வரும் மழையை பயன்படுத்தி பசுந்தாள் உரபயிர்களை பயிரிடலாம்.
- ✓ ஒளி புகும் 4 சதவித காற்றோட்டமான பாலியெத்தின் பை கொண்டு குலையினை முடவும். இதனால் பழுப்படையாத ஒரே மாதிரியான அளவு மற்றும் தரத்துடன் திராட்சை பழங்கள் கிடைக்கும்.
- ✓ வரும் நாட்களில் அதிக காற்று எதிர்பார்க்கப்படுவதால் வாழையில் முட்டு கட்டவும்.
- ✓ தற்பொழுது நிலவும் வானிலையில், குண்டுமல்லியில் மொக்கு துளைப்பான் தாக்குதல் தென்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த தாக்கப்பட்ட மொக்குகளை புழுக்களுடன் சேகரித்து அழிக்கவும் அல்லது வேப்பங்கொட்டை வடிநீர் 5 சதம் அல்லது புரோபோபோஸ் 25 EC @ 2 மி.லி./ லிட்டர் கலந்து தெளிக்கவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 34°செ முதல் 35°செஆகவும், மற்ற மாவட்டங்களில் 37°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 28°செஆகவும், மற்ற மாவட்டங்களில் 27°செ முதல் 29°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 75 சதவிகிமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 6 முதல் 16 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது நிலவும் பருவநிலையில் முந்திரியில் தண்டுத்துளைப்பான் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த முதலில் தோப்பை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். தாக்கப்பட்ட மரங்களை அப்புறப்படுத்த வேண்டும். கார்பரில் 50 சத நனையும் தூள் 0.1 சதம் மருந்தை தண்டுப்பகுதியில் சுமார் 1 மீட்டர் உயரம் வரை தடவி விட வேண்டும்.
- ✓ அதிகபட்ச வெப்பநிலை தொடர்ந்து உயர்வாக காணப்படுவதால் கால்நடைகளுக்கு நாள் ஒன்றக்கு 80 முதல் 100 லிட்டர் தண்ணீரை 4 தவணையாக பகிர்ந்து கொடுக்கவும்.

- ✓ தற்போது நிலவிவரும் வானிலையின் காரணமாக கலும்பு பயிரில் பஞ்சு அசுவினி தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகையான அசவினிகள் இலைகளின் அடியில் கூட்டம் கூட்டமாக குஞ்சுகளும், வளர்ந்த பூச்சிகளும் இலைகளின் சாற்றை உறிஞ்சி வாழும். தாக்கப்பட்ட இலைகிளல் வெள்ளை நிற தூள்கள் படிந்திருக்கும். இதன் காரணமாக சோகையின் ஓரங்களில் மஞ்சளாக மாறி காய்ந்து போகும். இயற்கை எதிரிகளான டைபாஏபிடோவோரா, மைக்ரோமஸ், காக்ஸினெலிட்ஸ் ஆகியவற்றை பயன்படுத்தி பஞ்சு அசுவினியின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். தாக்குதலுக்கு உள்ளான சோகைகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதை தவிர்க்க வேண்டும். பூச்சிக்கொல்லி தெளிக்கப்பட்ட சோகைகளை கால்நடைகளுக்கு தீவனமாக கொடுப்பதை தவிர்க்க வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் அசிப்பேட் 75 SP அல்லது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி குளோரோனபரிபாஸ் 25 EC என்ற பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கலாம்.
- ✓ தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையின் காரணமாக வெண்டை பயிரில் தண்டு மற்றும் காய்ப்புழுக்களின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இதனைக் கட்டுப்படுத்த 1 லிட்டர் தண்ணீருக்கு 5.0 கிராம் ஆசாடிராக்டின் 0.03% WSP (300 ppm) அல்லது 10 லிட்டர் தண்ணீருக்கு 5.0 மில்லி 5% ஆசாடிராக்டின் வேப்பங்கொட்டைக் கரைசல் ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ✓ தற்போது நிலவும் கோடை காலத்தில் கத்தரிப்பயிரில் வெள்ளை ஈக்களின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதனைக் கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும் பசை அட்டைப்பொறி எக்டருக்கு 12 வீதம் வைக்கவேண்டும். வேப்பெண்ணெய் 3 மில்லியுடன் 1 லிட்டர் நீர் கலந்து, அதனுடன் டீப்பால் என்ற ஒட்டும் திரவம் 1 மில்லியுடன் ஒரு லிட்டர் தண்ணீர் கலக்கப்பட்ட கலவையுடன் சேர்த்து தெளிக்க வேண்டும்.
- ✓ தற்போது நிலவும் பருவநிலையில் வாழையில் கிழங்கு துளைக்கும் கூன் வண்டு தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதன் தாக்கம் வாழையின் புதிதாக நடவு செய்யப்பட்ட வயல்களில் அதிக அளவில் இருக்கும். இவ்வண்டு இளம் மற்றும் வளர்ந்த மரங்களைத் தாக்கி பொருளாதார சேதத்தை ஏற்படுத்தும். இதனைக் கட்டுப்படுத்த 60-100 கி வேப்பங்கொட்டைப் பொடி அல்லது வேப்பம்புண்ணாக்கினை கிழங்குகளை நடும்போதும் பின்பு 4 மாதங்கள் கழித்து ஒரு முறையும் இடுவதால் பூச்சித்தாக்குதல் குறைவதோடு, நல்ல மகசூல் பெறலாம். 100 கிராமிற்கு அதிகளவோ அல்லது வேப்ப எண்ணெய் இடுவதோ வாழைப் பயிரினையே பாதிக்கக் கூடும். பிரமோன் அல்லது இனக் கவர்ச்சிப் பொறியினை எக்டருக்கு 25 என்ற எண்ணிக்கையில் வைத்து கவர்ந்து அழிக்கலாம்.

### 4. மலைப்பிரதேச மண்டலம்

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 13°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 60 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ வெயில் அதிகமான பகல் நேரங்களில் கறவை மாடுகளின் மேல் தண்ணீர் தெளித்து அதன் வெப்பத்தை தனிப்பதன் மூலம் பால் உற்பத்தி குறையாமல் பாதுகாக்கலாம். கோடை காலத்தில், அசோலாவை பசுந்தீவனமாக பயன்படுத்தலாம்.
- ✓ எதிர்பார்க்கக்கூடிய மிதமான மழை மற்றும் நிலவிவரும் அதிக ஈரப்பதம் காரணமாக, பீன்ஸ் பயிரில் வாடல் நோய் ஏற்படாமல் இருக்க, காப்பர் ஆக்ஸி குளோரைடு மருந்தை ஒரு லிட்டடர் தண்ணீருக்கு ஒரு கிராம் என்ற அளவில் கலந்து மண்ணில் ஊற்றவும்.

**5. வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் தென்படும். லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 27°செ முதல் 28°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 40 முதல 70 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 6-7 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த மூன்று நாட்களுக்கான நாமக்கல் மாவட்ட வானிலையில் மழைக்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது., பிற்பகலுக்கு மேல் நிலவும் காற்றின் வேகத்தால் மாலைக்குமேல் வெப்ப அளவு குறையும் வாய்ப்புள்ளது, இனிவரும் நாட்களில் பகல் வெப்ப அளவுகள் 39°செ, ஒட்டியே காணப்பட்டாலும், 40°செ என்ற அளவைத் தொடும் வாய்ப்பும் உள்ளது. எனவே, கோழிகள் வெப்ப உயர்வைத் தாக்க பழக்கப்படுத்தும் விதத்தில் பண்ணை மேலாண்மையைக் கடைபிடிக்கவேண்டும். மேலும், முட்டையின் எடை குறைவு மற்றும் குறைந்த தீவன எடுப்பை ஈடுகட்டும் வகையில் தீவனத்தில் சிறிதளவு தாவர எண்ணையை சேர்த்துவருதல் வேண்டும்.
- ✓ கோடை காலத்தில் தக்காளி சாகுபடி செய்யும் விவசாயிகள் பயிர்களில் வெப்பத்தின் தாக்கத்தை தவிர்கக வயலைச் சுற்றிலும் வரப்புகளிலும் அகத்தி அல்லது சித்தகத்தி அல்லது ஆமணக்கு விதைகளை 5 முதல் 6 அடி இடைவெளியில் .விதைப்புச் செய்யவேண்டும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 36°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 27°செ முதல் 28°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 50 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 முதல் 16 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ உழவர்கள் தங்களுடைய கால்நடைகளின் கொட்டகையின் கூரையின் மேல் தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத்தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.
- ✓ வெப்பம் அதிகமாக உள்ள பகல் நேரங்களில் கோழிப்பண்ணைகளில் தண்ணீர் தொட்டியை மேல் கூரை அமைத்து குழாய்களை ஈரமான கோணிப்பையால் மூடி கோழிகளுக்கு குளிர்ந்த தண்ணீர் அளிக்குமாறு கேட்டுக்காள்கிறோம்.
- ✓ பகல் நேரங்களில் வெப்பம் அதிகமாக இருப்பதால் கோழிப்பண்ணைகளில் தீவன தொட்டியை காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை உயர்த்தி வைப்பதால் வெப்பதாக்கத்தை குறைக்கலாம். மேலும் குடிநீரில் தாது உப்புகள் மற்றும் B – காம்ளக்ஸ் வைட்டமின் கலப்பதால் வெப்ப அயற்சியிலிருந்து. பாதுகாக்கலாம்.
- ✓ உழவர்கள் கறவை மாடுகளின் வெப்பத்தின் தாக்கத்தை குறைக்க வெயில் அதிகமாக இருக்கும் நேரத்தில் இரண்டு அல்லு மூன்று முறை தண்ணீர் தெளித்து உடல் வெப்பத்தினை தணிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ கால்நடைகளை ஏரி மற்றும் குளங்களில் உள்ள புற்களை மேயாமல் பார்த்துக்கொள்வதன் மூலம் தட்டைப் புழுக்களின் தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம்.
- ✓ செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ü காய்கறி பயிர்களின் சாறு உறுஞ்சும் பூச்சிகளின் தாக்கம் காணப்பட்டால் 5 சதவீத அளவு வேப்பங்கொட்டை கரைசலை தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 35°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 27°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 65 முதல் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு10 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் ஐந்து நாட்களில் பரவலாக 27 மி.மீ மழை பெய்ய வாய்ப்புள்ளது.
- ✓ மழை பெய்ய வாய்ப்புள்ளதால் பழவகை மரங்கள் மற்றும் மரவாசனை பயிர்களுக்கு உரமிடுதல் பூச்சி மருந்து மற்றும் களைக்கொல்லி தெளிப்பதை தள்ளி போடவும்.
- ✓ தோட்டக்கலை பயிர்களில் பயிர்பெருக்க முறைகளை மேற்கொள்ளலாம்
- ✓ மழை நீர் தேங்காமல் இருக்க வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களில் தகுந்த வடிகால் வசதி செய்யவும்.
- ✓ மழை இருக்கும் பட்சத்தில் வேர்விட்ட மிளகு குச்சிகளை நடவு செய்யலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம்,கோவை**